தமிழ்க் கல்வி நிலையம் ஹோம்புஷ்

Tamil Study Centre Homebush Inc

www.tsch.org.au

# Year End

# Exam Papers 2010

Year 1 – Year 10

# ஆண்டிறுதிப்

# பரீட்சைத்தாள்கள் 2010

**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2010

வகுப்பு: பாலர் திகதி:- 04-12-2010 நேரம்: 2 மணி

ஆசிரியர்கள்: திருமதி ப இராமகிருஷ்ணசுவாமி
திருமதி க விக்னேஸ்வரன்

1. **உங்கள் பெயரை எழுதுங்கள்** (9 புள்ளிகள்)

____________________________________________________________

2. **உயிர் எழுத்துக்களை எழுதுங்கள்** (10 புள்ளிகள்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | | இ | | உ | |
| எ | | ஐ | | ஓ | ஔ |

3. **உயிர் எழுத்தைச் சுற்றி வட்டம் போடுங்கள்.** (5 புள்ளிகள்)

i. க ங் ன இ ழி யி

ii. ட ளி ல் க அ ற

iii. ஞ ச் ண் உ ள் ச

iv. ன் வி பு ஓ ன ப

v. ண் க ட ஐ ச தீ

4. **மெய் எழுத்தைச் சுற்றி வட்டம் போடுங்கள்.** (5 புள்ளிகள்)

i. டு த ப த் டி ரை

ii. ற ண ம் மி ணி கு

iii. சி க ஞ ண் வு சீ

iv. கு யெ வி ங் கீ ணு

v. டு ல் றூ பி மூ ஞ

5. **விடுபட்ட எழுத்தைக் கோடுள்ள இடத்தில் எழுதி நிரப்புங்கள்.** (10 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| பா | ண் | ட | மா | ஞ் |

i. பா______ சாலை

ii. ஊஞ______சல்

iii. த______ ணீர்





iv. ______ ட்டி

v. அம் ______

6. **படத்திற்கு உரிய சொல்லைத் தெரிந்து எழுதுங்கள்**

(15 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| கழுகு | மயில் | கங்காரு | கிளி | சிங்கம் |

| | |
|---|---|
|  | |
|  | |
|  | |
|  | |
|  | |


7. **சோடி சேருங்கள்** (15 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| i. | காகம் | சிவப்பு |
| ii. | இலை | கறுப்பு |
| iii. | அப்பிள் | பச்சை |
| iv. | மாம்பழம் | நீலம் |
| v. | வானம் | மஞ்சள் |

8. **படத்தில் உள்ள வாகனங்கள் எவற்றில் செல்லும்?**
**சரியானதைத் தெரிந்து எழுதுங்கள்**

| ஆகாயம் | கடல் | நிலம் |
|---|---|---|

(6 புள்ளிகள்)

| | |
|---|---|
|  | |
|  | |
|  | |

9. **பார்த்து எழுதுங்கள்** (10 புள்ளிகள்)

i. படம்

| | | |
|---|---|---|
| | | |

ii. மாம்பழம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

iii. சேவல்

| | | |
|---|---|---|
| | | |

iv. புறா

| | |
|---|---|
| | |

v. தங்கை

| | | |
|---|---|---|
| | | |

10. **சொல்வதை எழுதுங்கள்**

(15 புள்ளிகள்)

i. ______________________________

ii. ______________________________

iii. ______________________________

**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2010

வகுப்பு: **ஒன்று** திகதி:- **04-12-2010** நேரம்: **2 மணி**

ஆசிரியர்: **திருமதி ச பாலகங்காதரன்**
**திருமதி க வடிவேற்பிள்ளை**

**மாணவர் பெயர்:-**

1. **பின்வரும் சொற்களில் விடப்பட்ட எழுத்துக்களை எழுதுக.**

(5x2=10 புள்ளிகள்)

i. சிங் _____ ம்

ii. குதி_____

iii. ஒட்டகச்_____விங்கி

iv. மு _____ ல்

v. வரிக்கு_____ரை

2. **தொடர்புள்ள சொற்களை இணைத்து கோடு வரைக.**

(5x2=10 புள்ளிகள்)

| | |
|---|---|
| i. காதால் | குரைக்கும் |
| ii. கண்ணால் | பிளிரும் |
| iii. நாய் | கேட்கலாம் |
| iv. யானை | கூவும் |
| v. சேவல் | பார்க்கலாம் |

3. ஐந்து பழங்களின் பெயர்களை எழுதுக.

(5x2=10 புள்ளிகள்)

i. ____________________

ii. ____________________

iii. ____________________

iv. ____________________

v. ____________________

**4.** பின்வரும் சொற்களைப் படித்து வகைப்படுத்தி எழுதுக.

(10x2=20 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| பாதம் | கண்ணாடி | காது | படம் | முகம் |
| நகம் | கட்டில் | கால் | மேசை | பொம்மை |

| **உடல் உறுப்புகள்** | **வீட்டுப் பொருட்கள்** |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

**5.** பின்வரும் கூண்டிற்குள் இருந்து 5 சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக.

(5x3=15 புள்ளிகள்)

| | | | |
|---|---|---|---|
| த | அ | ம் | மா |
| ப | ட் | ட | ம் |
| ந் | சை | கை | சா |
| து | நா | வீ | டு |
| பூ | ன் | த | ர் |
| சு | தை | யா | னை |

i. ____________________

ii. ____________________

iii. ____________________

iv. ____________________

v. ____________________

**6.** குழம்பியுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி வசனமாக எழுதுக.
(5x4=20 புள்ளிகள்)

i. இலை / நிறம் / பச்சை

______________________________

ii. சிறகு / பறவைகள் / உடையவை

______________________________

iii. நடப்பேன் / காலால் / நான்

______________________________

iv. வாழும் / யானை / காட்டில்

______________________________

v. தமிழ் / எனக்குத் / விருப்பம் / படிக்க

______________________________

**7.** கோடிட்ட இடங்களில் உரிய சொல்லை வைத்து வசனத்தை முடிக்கவும். (3x5=15 புள்ளிகள்)

i. என் பெயர் ______________________

ii. எனக்கு __________ வயது.

iii. நான் _____________ குடிப்பேன்.

iv. நான் __________________ படிப்பேன்.

v. எனக்கு _____________ நிறம் விருப்பம்.

| ஊதவிச்சொற்கள்: | | | | |
|---|---|---|---|---|
| ஐந்து | ஆறு | ஏழு | எட்டு | |
| பால் | தண்ணீர் | பழரசம் | தேநீர் | |
| கதைப்புத்தகம் | புத்தகம் | | | |
| பச்சை | மஞ்சள் | சிவப்பு | நீலம் | கறுப்பு |

**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2010

வகுப்பு: **இரண்டு** திகதி:- **04-12-2010** நேரம்: **2 மணி**

ஆசிரியர்: **திருமதி செ ஜெயமனோகர்**
**திருமதி க வனதேவா**

**மாணவர் பெயர்:-**

**1. கீழ் தரப்பட்டுள்ள பந்தியை படித்தபின் வினாக்களுக்கு விடை எழுதுக.** (5x4=20 புள்ளிகள்)

வாணியும், ரவியும் சகோதரர்கள். அவர்கள் இருவரும் தங்கள் பெற்றோருடன் பூங்காவிற்குச் சென்றார்கள். பூங்காவில் பல நிறங்களில் அழகான பூக்கள் பூத்து இருந்தன. வாணி பூக்களின் அழகைப் பார்த்து மகிழ்ந்தாள். ரவி பூங்காவில் இருந்த ஊஞ்சலில் ஆடி மகிழ்ந்தான். சூரியன் மறைவது பார்ப்பதற்கு அழகாக இருந்தது. பின்பு அவர்கள் வீட்டிற்குச் சென்றார்கள்.

i. வாணியும் ரவியும் எங்கே சென்றார்கள்?

________________________________________

ii. வாணியும் ரவியும் யாருடன் சென்றார்கள்?

________________________________________

iii. வாணி பூங்காவில் என்ன செய்தாள்?

________________________________________

iv. ரவி பூங்காவில் எதில் ஆடி மகிழ்ந்தான்?

________________________________________

v. அவர்கள் பூங்காவில் இருந்து எங்கு சென்றார்கள்?

________________________________________

**2. கோடிட்ட இடங்களில் உரிய சொல்லை வைத்து வசனத்தை முடிக்கவும்.** (5x2=10 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| பொங்கல் | நடந்து | சீருடை | பால் | விளக்கு |

i. கண்ணனும் வாணியும் _______________ அணிந்தார்கள்.

ii. _______________சத்துள்ள உணவு.

iii. அவர்கள் பாடசாலைக்கு _______________ சென்றார்கள்.

iv. அம்மா _______________ ஏற்றினார்.

v. தை மாதத்தில் வரும் பண்டிகை _______________

3. பின்வரும் சொல்லை வைத்து வசனம் எழுதுக. (5x2=10 புள்ளிகள்)

i. பழம்

_______________________________________________

_______________________________________________

ii. சிவப்பு நிறம்

_______________________________________________

_______________________________________________

iii. பூக்கள்

_______________________________________________

_______________________________________________

iv. பெயர்

_______________________________________________

_______________________________________________

v. அம்மா

_______________________________________________

_______________________________________________

**4.** பின்வரும் கூண்டிற்குள் இருந்து 10 சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக.

(10x1=10 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| வி | ள | க் | கு | அ |
| ண் | டி | ம | ர | ம் |
| மீ | க | ட் | ங் | மா |
| ன் | ர | ட | கு | டி |
| தா | டி | ம் | டை | தி |

i. ______

ii. ______

iii. ______

iv. ______

v. ______

vi. ______

vii. ______

viii. ______

ix. ______

x. ______

**5.** தொடர்பு படுத்துக. (5x2=10 புள்ளிகள்)




யானை



வீடு



பூக்கள்



கத்தி



மயில்

**6.** சரியான சொல்லின் கீழ் கீறிடுக.

(1x5=5 புள்ளிகள்)

i. குருவிகள் (மறத்தில் / மரத்தில்) இருந்தன.

ii. நாங்கள் (படம் / பாட்டு) பார்த்தோம்.

iii. நேற்று (மழை / வெயில்) பெய்தது.

iv. (பூ / பூக்கள்) அழகானவை.


v. ஆகாயம் (நீளம் / நீலம்) நிறமுடையது.

**7.** இடப்புறம் உள்ள சொற்களை வலப்புறம் இருக்கும் சொற்களுடன் தொடர்புபடுத்துங்கள்.

(5x2=10 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| i. | பாரதியார் | மிருகம் |
| ii. | கரடி | இனிக்கும் |
| iii. | மயில் | இசைக்கருவி |
| iv. | வாழைப்பழம் | புலவர் |
| v. | வீணை | பறவை |

**8.** சரியான எழுத்தை தெரிவு செய்து சொல்லை நிறைவு செய்யுங்கள். (5x1=5 புள்ளிகள்)




i. பூக் ___ள்

ii. _____டசாலை

iii. ______ லைபேசி

iv. தண் ____ர்

v. பழ ___ சாறு

**9.** பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி ஐந்து வசனங்கள் எழுதுங்கள். (15 புள்ளிகள்)

**i.** நான்

**ii.** எனது குடும்பம்

**iii.** எனது பொழுதுபோக்கு

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2010

வகுப்பு: **மூன்று** திகதி:- **04-12-2010** நேரம்: **2 மணி**

ஆசிரியர்: **திருமதி நி தயாளன்**

**மாணவர் பெயர்:-**

1. **கீழ் தரப்பட்டுள்ள கதையைப் படித்தபின் வினாக்களுக்கு விடை எழுதுக.** (25 புள்ளிகள்)

ஓர் ஊரில் ஒரு சிறுவன் தன் பெற்றோருடன் வசித்து வந்தான். அவர்கள் வீட்டில் நிறைய ஆடுகள் இருந்தன. அவற்றை சிறிது தூரத்தில் இருக்கும் புல்வெளிக்கு கூட்டிச் செல்வது சிறுவனின் வேலை.

புல்வெளியில் ஆடுகள் புல் மேயும். அப்போது சிறுவனுக்கு ஒரு வேலையும் இராது. அவன் சும்மா இருப்பான். நேரம் போகாது.

ஒருநாள் சிறுவனுக்கு ஒரு யோசனை வந்தது. அவன் மற்றவர்களை ஏமாற்ற நினைத்தான்.

‘‘ஐயோ! ஓநாய்! ஓநாய்!’’ என்று அவன் கத்தினான். அதைக் கேட்டு ஊரில் இருந்த பலரும் ஓநாய் ஆடுகளைப் பிடிக்கப் போகிறது என்று நினைத்து ஓடி வந்தார்கள். ஓநாயை அடிப்பதற்கு பெரிய தடிகளுடன் வந்த ஊர் மக்கள் ‘‘எங்கே ஓநாய்? எங்கே ஓநாய்?’’ என்று சிறுவனைக் கேட்டார்கள். சிறுவன் அவர்களைப் பார்த்துச் சிரித்தான். ‘‘ஓநாய் வரவில்லை. நான் உங்களை ஏமாற்ற சும்மா கத்தினேன்.’’ என்றான். வந்தவர்கள் ‘‘இப்படிச் செய்யாதே!’’ என்று கூறிச் சென்றார்கள்.

சிறுவன் அடுத்த நாளும் ‘‘ஓநாய்! ஓநாய்!’’ என்று சும்மா கத்தினான். தடிகளுடன் ஓடிவந்த ஊரவர்கள் ஏமாந்தார்கள். அவர்கள் ‘‘இனி நீ கத்தினால் நாங்கள் வரமாட்டோம்? என்று கூறிவிட்டு கோபத்துடன் திரும்பிச் சென்றார்கள்.

பின்பு ஒருமுறை சிறுவன் ஆடுகளை புல் மேய விட்டு பார்த்திருக்கும்போது உண்மையிலேயே ஓநாய் வந்துவிட்டது. சிறுவன் பயத்தில் ஓநாய்! ஓநாய்!’’ என்று கத்தினான். ஆனால்

ஒருவரும் உதவிசெய்ய வரவில்லை. ஊர்மக்கள் எல்லோரும் சிறுவன் மீண்டும் ஏமாற்றவே கத்துகிறான் என்று நினைத்துவிட்டார்கள். சிறுவன் மீண்டும் மீண்டும் கத்தினான். ஆனால் ஒருவருமே வரவில்லை.

ஓநாய் ஆடுகளை ஒவ்வொன்றாய்ப் பிடித்துக் கடித்தது. சிறுவன் அழுதுகொண்டு வீட்டிற்குப் போனான்.

i. சிறுவன் ஆடுகளை எங்கே கூட்டிச்செல்வான்? (3 புள்ளிகள்)

________________________________________

ii. சிறுவன் ஏன் ஊர் மக்களை ஏமாற்றினான்? (3 புள்ளிகள்)

________________________________________

iii. சிறுவன் எப்படி ஊர் மக்களை ஏமாற்றினான்? (3 புள்ளிகள்)

________________________________________

iv. ஊரவர்கள் ஏன் தடிகளுடன் ஓடி வந்தார்கள்? (3 புள்ளிகள்)

________________________________________

v. ஊரவர்கள் ஏன் கோபத்துடன் திரும்பிச் சென்றார்கள்? (3 புள்ளிகள்)

________________________________________

vi. ஊர்மக்கள் ஏன் சிறுவனுக்கு உதவி செய்யவில்லை? (3 புள்ளிகள்)

________________________________________

vii. ஆடுகள் எவ்விதம் இறந்தன? (3 புள்ளிகள்)

________________________________________

viii. இந்தக் கதைக்கு ஒரு பொருத்தமான பெயர் எழுதுக. (4 புள்ளிகள்)

________________________________________

**2. ஒத்த ஒலிச்சொற்கள் எழுதுக.**

(5x2=10 புள்ளிகள்)

i. கூட்டம் ________________________

ii. ஆறு ________________________

iii. மணி ________________________

iv. காலை ________________________

v. கண் ________________________

**3.** பின்வரும் வசனங்களை பன்மையில் மாற்றி எழுதுக.

(5x3=15 புள்ளிகள்)

i. அவன் காலணிகளைக் கழற்றினான்.

________________________

________________________

ii. கலா ஒரு பொம்மையைக் கொடுத்தாள்.

________________________

________________________

iii. குதிரை புல் மேய்ந்தது.

________________________

________________________

iv. நான் இந்த ஆண்டு தான் இங்கு வந்தேன்.

________________________

________________________

v. இவள் என் பேரப்பிள்ளை

________________________

________________________

4. அடைப்புக்குள் இருக்கும் சொல்லைப் பொருத்தமான முறையில் பயன்படுத்துக.

(5x2=10 புள்ளிகள்)

i. ______________ (மரம்) குவாலாக்கள் இருந்தன.

ii. யாறா ஆற்றில் அவர்கள் _______________ (கப்பல்) சென்றார்கள்.

iii. _____________ (தாத்தா) எமது மோட்டார் வண்டியில் ஏற்றிச் செல்லவேண்டும்.

iv. நான் அடுத்தமுறை அதிக நாட்கள் __________________ (தங்கு).

v. நாங்கள் தமிழில் கடிதம் ___________________ (எழுது)

**5.** உங்கள் தாத்தா பாட்டிக்கு ஒரு சிறு கடிதம் எழுதுக.

(20 புள்ளிகள்)

**6.** பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி பத்து வசனங்கள் எழுதுக.
(20 புள்ளிகள்)

i. வாணி விழா அல்லது நத்தார் பண்டிகை
ii. எனது விடுமுறை
iii. தந்தையர் தினம்

**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2010

வகுப்பு: **நான்கு** திகதி:- **04-12-2010** நேரம்: **2 மணி**

ஆசிரியர்: **திரு சிவா சிவானந்தா**

**மாணவர் பெயர்:-**

______________________________

**1. கீழ் தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** (4x5=20 புள்ளிகள்)

**<u>மிதிவண்டி</u>**

முற்காலத்தில் மனிதன் ஓரிடத்தில் இருந்து மற்ற இடத்திற்கு நடந்தே சென்றான். பின்னர் ஒட்டகம், குதிரை போன்ற மிருகங்களில் ஏறிச் சென்றான்.

உருண்டையான கல்லும், உருளையான கட்டையும் உருண்டோடுவதைக் கண்ட மக்கள் அதனை கொண்டு சக்கரத்தை உருவாக்கினர். இந்த சக்கரமே இன்றைய இயந்திர யுகத்தின் ஆரம்பம்.

இந்த சக்கரங்களை ஒரு மரச்சட்டத்தில் இணைத்து ஓட்டுபவர் இதல் ஏறியிருந்து காலை மாறி மாறி நிலத்தில் உந்துவதன் மூலம் இந்த மிதி வண்டி நகர்ந்தது. பின்னர் திரும்புவதற்காக "கைபிடித் தண்டு" அமைக்கப்பட்டது. அதன் பின்னர் காலால் மிதிப்பதற்கான பலகை பொருத்தப்பட்டது.

மிதிப்பதன் மூலம் நகரும் வண்டி என்பதால் இது மிதிவண்டி எனப்பட்டது. இதனை தமிழர்கள் "சைக்கிள்" என்று அழைப்பர்.

இரண்டு சக்கரங்களில் முதலில் முன் சக்கரம் பெரிதாகவும் பின் சக்கரம் சிறிதாகவும் செய்து பாவித்தனர்.

பின்னர் பின்சக்கரம் பெரிதாகவும் முன்சக்கரம் சிறிதாகவும் உபயோகித்தனர்.

1880ம் ஆண்டே சம அளவான சக்கரங்கள் உடைய வண்டி உருவாகியது.

i. முற்கால மனிதன் எவ்வாறு ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குச் சென்றான்?

________________________________________

________________________________________

ii. எதனைக் கண்ட மனிதன் சக்கரங்களை உருவாக்கினான்?

______________________________________________

______________________________________________

iii. சக்கரங்கள் எந்த யுகத்தை ஆரம்பித்து வைத்தன?

______________________________________________

______________________________________________

iv. இதற்கு ஏன் "மிதி வண்டி" என்ற பெயர் வந்தது?

______________________________________________

______________________________________________

v. 1880 ஆண்டு எவ்வாறான மிதிவண்டி உருவானது?

______________________________________________

______________________________________________

**2.** எதிர்க்கருத்துச் சொல் தருக. (1x5=5 புள்ளிகள்)

| | |
|---|---|
| i. திற | |
| ii. படு | |
| iii. விரும்புதல் | |
| iv. தூரத்தில் | |
| v. வெளியே | |

**3.** ஒத்தகருத்துச் சொல் தருக. (1x5=5 புள்ளிகள்)

| | |
|---|---|
| i. தாமரை | |
| ii. இயலாது | |
| iii. முன்னேற்றம் | |
| iv. இடர் | |
| v. அவா | |

**4.** தமிழ்ச்சொல் எழுதுக. (1x5=5 புள்ளிகள்)

| | |
|---|---|
| i. Dog | |
| ii. Lion | |
| iii. Dance | |
| iv. write | |
| v. Tomato | |

**5.** சொற்களை ஒழுங்குபடுத்தி வசனமாக எழுதுக.(4x5=20 புள்ளிகள்)

i. ஓய்வெடுத்தனர் / எல்லோரும்/ உண்ட / சற்று / உணவு / பின்னர்

______________________________

______________________________

ii. கிழக்கு / சூரியன் / ஒளிக்கதிர்கள் / வானில் / தாவின

______________________________

______________________________

iii. காலை / கூப்பிட்டார் / தயாரானதும் / எம்மை / உணவு / அம்மா

______________________________

______________________________

iv. வெண் / ஒளிக்கதிர்கள் / முகிற்கூட்டங்களில் / வரைந்தன / வண்ணக்கோலங்கள் / தாவி

______________________________

______________________________

v. கற்பனை / மனம் / ஒன்றி / உலகில் / அவள் / சஞ்சரித்தாள்

______________________________

______________________________

**6.** அவுஸ்திரேலியாவுக்கு வெளியில் இருக்கும் உமது நண்பர் அல்லது உறவினருக்கு 25 சொற்களுக்கு குறையாமல் ஒரு கடிதம் எழுதுக. (20 புள்ளிகள்)

**7.** தமிழ்ப் பாடசாலையில் உங்கள் அனுபவம் பற்றி 10 வசனத்திற்குக் குறையாமல் எழுதுக. (25 புள்ளிகள்)

**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2010

வகுப்பு: **ஐந்து** திகதி:- **04-12-2010** நேரம்: **2 மணி**

ஆசிரியர்: **திருமதி செ சிவசுப்ரமணியம்**

**மாணவர் பெயர்:-**

**1. பின்வரும் கதையை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**
(3x5=15 புள்ளிகள்)

**<u>சுதந்திரம்</u>**

ஒரு ஊரில் ஒரு தோட்டக்காரன் வாழ்ந்து வந்தான். அவனிடம் ஒரு மாடு இருந்தது. அவன் அந்த மாட்டை ஒரு அளவான கயிற்றினால் கட்டினான். அக்கயிற்றை மரத்தில் கட்டி விட்டான். மாடு மகிழ்ச்சியாக புல் மேய்ந்தது. ஒரு நாள் மாட்டிற்கு தோட்டக்காரன் தனக்குப் போதுமான சுதந்திரத்தைத் தரவில்லை என்ற எண்ணம் ஏற்பட்டது. எனவே மாடு தோட்டக்காரனிடம் எனக்கு இங்கு தேவையான சுதந்திரமில்லை. இந்த வெட்ட வெளியில் நான் சுதந்திரமாகப் புல் மேய வேண்டும். என்னை அவிழ்த்து விடு என்றது. அதற்கு தோட்டக்காரன் அளவுக்கு மீறிய சுதந்திரம் ஆபத்தையே தரும். எனவே நான் கயிற்றை அவிழ்த்து விடமாட்டேன் என்றான். மாடு அவிழ்த்து விடு என்று அடம் பிடித்தது. சரி நான் அவிழ்த்து விடுகிறேன், கட்டுப்பாடாக எனக்குச் சொந்தமான இந்தப் புல்வெளியில் மட்டும் புல் மேயவேண்டும் என்று நிபந்தனை விதிக்க மாடும் ஏற்றுக்கொண்டது. தோட்டக்காரன் மாட்டை அவிழ்த்து விட்டான்.

ஆரம்பத்தில் மாடு தோட்டக்காரனுக்குச் சொந்தமான நிலத்தில் புல் மேய்ந்தது. நல்ல பிள்ளையாக நடந்து கொண்டது. சில நாட்களின் பின்பு பக்கத்துத் தோட்டக்காரனின் காய் கறிகளைச் சாப்பிட வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. எனவே பக்கத்திலிருந்த தோட்டத்திற்குள் சென்று காய் கறிகளைச் சாப்பிட்டது. அதைக்கண்ட பக்கத்துத் தோட்டக்காரன் மாட்டைக் கம்பினால் அடித்தான். மாடு கத்தியவாறு வீழ்ந்து கிடந்தது. அப்போது தான் அளவுக்கு மீறிய சுதந்திரம் ஆபத்தைத் தரும் என்று தோட்டக்காரன் கூறியது நினைவுக்கு வந்தது.

இதைப்போல பிள்ளைகளும் பெற்றோர் எங்களுக்கு போதிய சுதந்திரத்தைத் தராது கட்டுப்படுத்துகிறார்கள் என்று நினைக்காது அவர்களின் சொற்கேட்டு நல்ல பிள்ளைகளாக நடந்து நல்ல நிலைக்கு வரவேண்டும்.

i. தோட்டக்காரன் எந்த மிருகத்தை வளர்த்து வந்தான்?

ii. மகிழ்ச்சியாகப் புல் மேய்ந்து வந்த மாட்டிற்கு ஏற்பட்ட எண்ணம் என்ன?

iii. கயிற்றை அவிழ்த்து விடு என்று கேட்ட மாட்டிற்கு தோட்டக்காரன் கூறிய பதில் என்ன?

iv. அளவுக்கு மீறிய சுதந்திரம் கேட்ட மாட்டிற்கு இறுதியில் ஏற்பட்ட நிலை என்ன?

v. பிள்ளைகள் எவ்வாறு வாழவேண்டும் என்று இங்கு கூறப்பட்டுள்ளது?

**2.** பின்வரும் வாக்கியங்களில் ''பேர்'' என்ற சொல்லை பொருத்தமான காலத்துக்கு மாற்றி எழுதுக. (2x5=10 புள்ளிகள்)

உதாரணம்: நான் நேற்றுப் **<u>போனேன்.</u>**

i. நாங்கள் நாளை ______________________

ii. நான் இப்போது ______________________

iii. கண்ணன் நேற்றுப் ______________________

iv. வாணி நாளை ______________________

v. வாணியும் கண்ணனும் நாளை ______________________

**3.** கீழே தரப்பட்டிருக்கும் சொற்களில் பொருத்தமான சொற்களை தெரிந்து இடைவெளியில் வைத்து நிரப்புக. (2x5=10 புள்ளிகள்)

**விளையாடினார்கள்** **தொடங்கினார்** **பறந்தது**

**வேட்கப்படுகின்றோம்** **காப்பாற்றினான்**

i. முதியவர் கதையைக் கூற ______________________

ii. நாங்கள் எம் செயலுக்காக ______________________

iii. பிள்ளைகள் ஒன்றுசேர்ந்து ______________________

iv. அரசன் தஞ்சம் புகுந்த புறாவை ______________________

v. கிளி உயர உயர ______________________

**4.** பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றை அட்டவணைப்படுத்துக. (3x5=15 புள்ளிகள்)

i. நாங்கள் உண்மையைச் சொல்வோம்.

ii. உழவன் நெல் விதைத்தான்.

iii. காகம் கூடு கட்டியது.

iv. அழுதபிள்ளை பால் குடிக்கும்.

v. காற்று மரங்களை வீழ்த்தியது.

| எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|
| i. | | |
| ii. | | |
| iii. | | |
| iv. | | |
| v. | | |

**5.** கோடிடப்பட்ட சொல்லின் எதிர்க்கருத்துள்ள சொல்லை கீறிட்ட இடத்தில் நிரப்பி வசனத்தை பூரணப்படுத்துக. (2x5=10 புள்ளிகள்)

**i.** எனது சட்டை **<u>பழையது</u>**. எனக்கு ________________ சட்டை வாங்க வேண்டும்.

**ii.** எனது வீட்டிலிருந்த மிக **<u>உயர்ந்த</u>** மரம் ________________ செடிகளுக்கு வெளிச்சம் வராது நிழலைத் தந்தது.

**iii.** **<u>புகழ்ச்சி</u>**யினால் மகிழ்ச்சி ஏற்படும். ஆனால் ________________யினால் துன்பம் ஏற்படும்.

iv. எங்கள் கூட்டம் காலையில் **<u>ஆரம்பம்</u>** ஆகி பின் மாலையில் ________________ பெற்றது.

v. கண்ணன் எனது **<u>நண்பன்</u>** ஆவான். நான் அவனுடன் சண்டையிட்டு ________________ ஆக விரும்பவில்லை.

**6.** அவுஸ்திரேலியாவுக்கு வெளியில் இருக்கும் உமது நண்பர் அல்லது உறவினருக்கு 30 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.

(20 புள்ளிகள்)

**7.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றைப்பற்றி 15 வசனங்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)

i. தமிழர்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் ஒன்றைப்பற்றி எழுதுக.
ii. தமிழ் வளர்த்த பெரியார்களுள் ஒருவரைப்பற்றி எழுதுக. (வள்ளுவர், பாரதியார், கம்பர், விபுலானந்த அடிகள், ஔவையார், ……………)
iii. ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டி
iv. விடுமுறை நாட்களைக் கழித்த விதம்
v. மறக்க முடியாத நிகழ்ச்சி

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2010

வகுப்பு: **ஆறு** திகதி: 04.12.2010 நேரம்: 2 **மணி**

ஆசிரியர்: **திருமதி** R.T.குலராஜா

**மாணவர் பெயர்:**

# ஆண்டிறுதிப் பரீட்சை 2010

## எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

## 1. பின்வரும் உரைப்பகுதியை கவனமாகப் படித்து கீழே உள்ள வினாக்களுக்குப் பூரண விடைதருக:

### பிஸா நகரின் சாய்ந்த கோபுரம்

இத்தாலி நாட்டில் பிஸா என்னும் நகரில் 1350 ஆம் ஆண்டில் இந்தக்கட்டடம் கட்டப்பட்டது. இது ஐம்பத்தாறு மீட்டர் உயரம் உடையது. எட்டு மாடிகள் கொண்ட இந்தக் கட்டடம் நீள் உருளை வடிவிலானது. இந்தக்கட்டடம் உறுதியான நிலத்தில் கட்டப்படாததால் அது பக்கவாட்டில் கொஞ்சம் கொஞ்சமாக சரிந்து கொண்டு வருகிறது. சாய்ந்த கோபுரம் என்ற பெயர்வர இதுவே காரணம். இக்கட்டடம் வெள்ளைப் பளிங்குக் கற்களைக் கொண்டு கட்டப்பட்டது. கட்டடத்தின் ஒவ்வொரு மாடியின் வெளிப்புறத்திலும் அழகிய வேலைப்பாடுகள் கொண்ட தூண்கள் அமைந்துள்ளன.

பிஸா கோபுரத்தின் உச்சியை அடைய மக்கள் முன்னூறு படிகள் ஏறவேண்டும். எட்டாவது மாடியில் ஏழு மணிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு மணியும் வெவ்வேறு ஒலி எழுப்பும். அக்காலத்தில் இந்த மணிகள் தேவாலயத்தில் வழிபாடு நடைபெறுவதை மக்களுக்கு அறிவிக்கப் பயன்பட்டன. ஆனால் இந்த மணிகளின் அசைவு பிஸா கோபுரம் இன்னும் அதிகமாக சாயும் வாய்ப்பை ஏற்படுத்தலாம் என்ற காரணத்தால் அவை இன்று ஒலிக்கப்படுவதில்லை.

1. பிஸா கோபுரம் எந்த நாட்டில் உள்ளது?

   ______________________________________________

2. பிஸா கோபுரம் சரிந்து கொண்டு போவதன் காரணம் என்ன?

   ______________________________________________

   ______________________________________________

3. கோபுர உச்சியை அடைய எத்தனை படிகள் ஏறவேண்டும்?

   ______________________________________________

4. பிஸா கோபுர மணிகளின் சிறப்பு என்ன?

   ______________________________________________

   ______________________________________________

5. பிஸா கோபுர மணிகள் இப்போது ஏன் ஒலிக்கப்படுவதில்லை?

   ______________________________________________

   ______________________________________________

(5x3=15 புள்ளிகள்)

## 2. கீழே உள்ள பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தாருங்கள்:

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே

1. வாழ்க என்பதன் எதிர்ச்சொல் என்ன?

_______________________________________________

2. ஆகாயம் என்பதற்கு இப்பாடலில் உள்ள ஒத்தசொல் எது?

_______________________________________________

3. இப்பாடலில் குறிப்பிடப்படும் ஒரு இலக்கம் என்ன?

_______________________________________________

4. வண்மொழி என்றால் என்ன?

_______________________________________________

5. “இசை கொண்டு வாழியவே” என்பதில் இசை கொண்டு என்பது: (புகழோடு / இசையோடு) என்பதாகும்.

_______________________________________________

(5x3= 15 புள்ளிகள்)

**3. அட்டவணை ‘அ’ வில் உள்ள சொல்லுடன் மிகப் பொருந்தக்கூடிய சொல் ‘ஆ’ அட்டவணையுடன் இணையுங்கள்:**

| | அ | ஆ |
|---|---|---|
| 1 | வைத்தியர் | பரதநாட்டியம் |
| 2 | பாடசாலை | பந்து |
| 3 | வாத்தியம் | நோயாளி |
| 4 | விளையாட்டு | வகுப்பறை |
| 5 | தமிழ்க்கலை | வயலின் |

(5x 1 = 5 புள்ளிகள்)

## 4. இடை வெளியை நிரப்புங்கள்:

1. நேற்றுக் கடும் ____________________ பெய்தது (மலை / மழை)
2. கண்ணன் சுவரில் _________________ அறைந்தான் (ஆனி / ஆணி)
3. பாலில் சீனிபோட்டு ____________________ குடித்தால் இனிக்கும் (கரைத்துக் / கறைத்துக்)
4. வாணியின் காலில் ___________ குத்தியது (முல்லுக் / முள்ளுக்)
5. எமது நாடு ___________________ செழிக்கும் நாடு. (வளம் / வழம்)

(5x 2 = 10 புள்ளிகள்)

## 5. பெயராகவும் வினையாகவும் வரவசனம் அமையுங்கள்:

1. **படி** பெயர்__________________________________________________
   வினை__________________________________________________
2. **ஆடு** பெயர்__________________________________________________
   வினை__________________________________________________
3. **முடி** பெயர்__________________________________________________
   வினை__________________________________________________
4. **உடை** பெயர்__________________________________________________
   வினை__________________________________________________
5. **கரை** பெயர்__________________________________________________
   வினை__________________________________________________

(5x 4 = 20 புள்ளிகள்)

## 6. கடிதம் எழுதுதல்

தமிழ்ப் பாடசாலையில் நடைபெற்ற கலைவிழாவைப்பற்றி இலங்கையில் இருக்கும் உமது உறவினருக்குக் ஒரு கடிதம் எழுதுக.

(15 புள்ளிகள்)

7. **பின்வரும் தலைப்பில் <u>ஒன்றைத்</u> தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக:**

1. அவுஸ்திரேலியாவின் பருவகாலங்கள்
2. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
3. நீர் விரும்பிக் கொண்டாடும் பண்டிகை

(20 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2010

வகுப்பு: ஏழு திகதி: 04.12.2010 நேரம்: 2 மணி

ஆசிரியர்: திருமதி சா.விஜயநாதன்

மாணவர் பெயர்:

# ஆண்டிறுதிப் பரீட்சை 2010

## எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

## 1. பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக:

### கலைகள்

மக்களின் மனத்திற்கு மகிழ்ச்சியை அளிப்பனவாக கலைகள் விளங்குகின்றன. இசைக்கலை, நடனக்கலை, நாடகக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, கட்டடக்கலை போன்றவை குறிப்பிடக் கூடிய கலை வகைகளாகும். தமிழ் மக்களின் வாழ்க்கையில் இக்கலைகள் பழைய காலத்திலிருந்து முக்கியத்துவம் பெற்றுவந்ததை அறியமுடிகின்றது.

“ஆய கலைகள் அறுபத்திநான்கியையும்
ஏய உணர்விக்கும் என் அன்னை”

என்ற சகலகலாவல்லி மாலைப் பாடல் கலைகள் 64 என்று கூறுகின்றது.

இவற்றுள் இசைக்கலையை எடுத்து ஆராய்ந்தால் இயற்கை அம்சங்களிலிருந்தே இசை உருவானது என்று அறிஞர் கூறுவர். மலையிலிருந்து ஆறு பாய்ந்து வருகின்றபோதுதான் ஓசை ஏற்படுகின்றது. மூங்கில் மரங்களில் வண்டுகள் துளை போடுகின்றன. அந்த துவாரங்களினூடாக காற்று வீசுகின்றபோது குழலிசை பிறக்கின்றது. அதிகாலை வேளையில் பறவையினங்கள் பாடுகின்றன. இரவுவேளைகளில் வண்டுகள் ரீங்காரமிடுகின்றன.

இயற்கையிலிருந்து தோற்றம் பெற்ற இசையை வெளிப்படுத்த மனிதன் சில கருவிகளை உருவாக்கினான். அவை தோல்க்கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி என மூன்றுவகைப்படும். தவில் எனப்படும் மேளம், தபேலா, மிருதங்கம் போன்றன தோல்க் கருவிகளாகும். புல்லாங்குழல், நாதஸ்வரம் போன்றன துளைக் கருவிகளாகும், வீணை, வயலின் போன்றன நரம்புக் கருவிகளாகும்.

இசைக்கேற்ப ஆடுகின்ற ஆட்டம் நடனம் எனப்படும். இராகம், பாவம், தாளம் மூன்றும் சேர்ந்தது நடனக் கலையாகும். நடனக் கலையும் இயற்கையோடு தொடர்புபடுவதை அவதானிக்கலாம். கருமேகங்கள் சூழ்ந்து மழை பெய்யப்போகும் அறிகுறி தோன்றியவுடன் மயில் தோகை விரித்து ஆடுகின்றது. மகுடியின் ஓசைகேட்டு பாம்பு படமெடுத்து ஆடுகின்றது. பழைய காலத்தில் தமிழர்களிடம் இருந்த நடன வகைகளையும், இந்தியாவின் பல பாகங்களிலிலுமிருந்த நடன வகைகளையும் ஒழுங்குபடுத்தி பரதமுனிவர் பரத நாட்டியம் என்னும் அற்புதமான நடனக்கலையை அறிமுகப்படுத்தினார். இன்று உலகின் பலபாகங்களிலும் பரதநாட்டியம் தமிழர்களாலும், இந்தியர்களாலும் அரங்கேற்றப்பட்டு வருகின்றது.

1. கலைகள் எவ்வாறு மக்களுக்கு நன்மை பயக்கின்றன?

2. மொத்தம் எத்தனை கலைகள் உள்ளன?
அவற்றுள் ஐந்தை எழுதுக.

3. "இயற்கையிலிருந்தே இசை உருவானது" என்று கூறுவதற்குரிய இரண்டு ஆதாரங்களை எழுதுக?

4. தவில் (மேளம்) மிருதங்கம் என்பன ஏன் தோல்க்கருவி என்று கூறப்படுகின்றன?

5. நடனக்கலை என்றால் என்ன?

(20 புள்ளிகள்)

**2. பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி நான்கு சொற்களுக்கு குறையாத வசனங்களை எழுதுக.**

1. வணக்கம்

_______________________________________________

2. தமிழ் மொழி

_______________________________________________

3. விளையாடினோம்

_______________________________________________

4. நாடகம்

_______________________________________________

5. சிரித்தான்

_______________________________________________

6. வெறுப்பு

_______________________________________________

7. சங்கீதம்

_______________________________________________

8. கலைவிழா

_______________________________________________

9. முக்கியமானது

_______________________________________________

10. பெற்றோர்

_______________________________________________

(10 புள்ளிகள்)

**3. பின்வரும் உரையாடலை வாசித்து மிகுதி உரையாடலை பூர்த்தி செய்க.**

பேரன் - தாத்தா! தாத்தா! மண்வெட்டியுடன் எங்கே போகிறீர்கள்.
தாத்தா - நம்முடைய தோட்டத்திற்கு போகிறேன்.

பேரன் - நானும் வரட்டுமா?
தாத்தா - சரி வா.

பேரன் -________________________________________

________________________________________

தாத்தா -________________________________________

________________________________________

பேரன் -________________________________________

________________________________________

தாத்தா -________________________________________

________________________________________

பேரன் -________________________________________

________________________________________

தாத்தா -________________________________________

________________________________________

பேரன் -________________________________________

________________________________________

தாத்தா -________________________________________

________________________________________

பேரன் -________________________________________

________________________________________

தாத்தா -________________________________________

________________________________________

(20 புள்ளிகள்)

## 4. கீழ் காணும் விளம்பரத்தை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக:

### விளம்பரம்

**ஆச்சரியம் ஆனால் உண்மை**

உங்கள் ஆடை அலங்காரத்துக்கு மேலும் அழகு சேர்க்க

**தையல் இயந்திர மனிதக் கருவிகள்**

- துணிகளை தேவையான அளவில் வெட்டும்
- தையல் பொறியில் ஆடைகளைத் தைக்கும்
- ஆடைகளில் பூ வேலைப்பாடுகளைச் செய்யும்

தரமானது
நம்பகரமானது
மலிவான விலை
மனநிறைவான சேவை

ஐப்பசி மாதம் தொடக்கம் இரண்டு மாதங்களுக்கு இலவசம்

உங்களது தேவைக்கேற்ப அமைப்புகளில்
மாற்றம் செய்து தரப்படும்.
ஓராண்டுக்கு பழுதுபார்ப்பு உத்தரவாதம்.
வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**நீங்கள் வருகை தரவேண்டிய நிறுவனம்**

பாலசூரியன் தையல் நிறுவனம்
எண் 1 கோவில் வீதி, சிட்னி 2000
தொலைபேசி எண் 02 9171 5241

### வினாக்களுக்கு விடை எழுதுக.

1. விளப்பரப்படுத்தப்பட்டுள்ள பொருள் எத்தகைய வேலைகளைச் செய்யக்கூடியது?

________________________________________

________________________________________

________________________________________

(2 புள்ளிகள்)

2. அப்பொருளை வாங்குபவர் எவ்வகையில் பலன் அடைவார்?

________________________________________

________________________________________

(2 புள்ளிகள்)

3. இப்பொருளை விற்கும் நிறுவனத்தின் சிறப்பான சேவைகள் யாவை?

(2 புள்ளிகள்)

4. விளம்பரம் செய்யப்பட்டுள்ள பொருளை எப்போது வாங்குவீர்? காரணம் எழுதுக.

(2 புள்ளிகள்)

5. உங்களை ஒரு வானொலி அறிவிப்பாளராகக் கற்பனை செய்து, வானொலியில் வாசிப்பதற்கு ஒரு ஆடை விற்பனை நிலையத்திற்கு 30 சொற்களுக்கு குறையாமல் ஒரு விளம்பரம் எழுதுக.

(7 புள்ளிகள்)

5. நீர் சென்ற வெளிநாட்டு உல்லாசப் பிரயாணம் பற்றி உமது நண்பர் ஒருவருக்கு கடிதம் எழுதுக. (60 சொற்கள்)

(15 புள்ளிகள்)

**6. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 100 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.**

- நீங்கள் விரும்பும் பெரியார்
- புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ்மொழி

(20 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2010

வகுப்பு: **எட்டு** திகதி:- **04-12-2010** நேரம்: $2\frac{1}{2}$ **மணி**

ஆசிரியர்: **திருமதி மா சோமாஸ்கந்தன்**

**மாணவர் பெயர்:-**

______________________________

1. **பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**
(20 புள்ளிகள்)

## முல்லைக்கொடிக்கு தேர் கொடுத்த வள்ளல்

பாரி பறம்பு நாட்டு மன்னன். அறிஞர்களையும் வறியோர்களையும் ஆதரித்து மகிழும் அரும் பண்பாளன். குறுநில மன்னனாகிய பாரி பெருங் கொடை வள்ளலாக விளங்கினான். பாரியின் உள்ளத்தில் அன்பும் அறமும் செழித்து வளர வளரப் பறம்புநாட்டிலும் வளம் பல நிரம்பி மலர்ந்தன. வள்ளல் பாரியின் அன்பு நிழலில் வாழ்ந்த பறம்பு நாட்டு மக்கள் அல்லல் என்பதை அறியாராய் அறத்தைக் காத்து ஆக்கம் பெருக்கினார்கள். ஈந்துவக்கும் பாரியின் இனிய பண்புகள் நல்லிசைப் புலவராகிய கபிலரின் உள்ளத்தை அள்ளிவிட்டன. புலமை நலம் படைத்த கபிலர் பாரியின் புகழைப் பாடிப் பாடி ஆவி தளிர்த்தார்.

பாரி பயன்கருதாது கொடுக்கின்ற பண்பாளன் என்பதை உணர்ந்த கபிலர் மிகவும் மகிழ்ந்தார். மாரி இந்த உலகத்தை வாழ்விப்பதுபோலவே பாரியும் வாழ்விக்கின்றான். மாரியினால் மக்களும் விலங்கினங்களும் மட்டுமல்ல, புல்லும் கொடியும் மரமும் தளிர்த்துப் பூத்துக் காய்த்துக் கனிந்து பயன் தருகின்றன. பாரியும் மக்களுக்கு மட்டும் வாரி வழங்கிப் பாவும் பாராட்டும் பெறுகின்ற அளவில் நிற்பவன் அல்லன். கொடுத்தால் புகழ் பெருகும் என்ற எண்ணத்துடன் கொடுக்கின்ற வாணிகக் கொடையாளன் அல்லன். பிற உயிர்கள் படுகின்ற அல்லலை கண்டு ஆவி உருகிக் கொடுக்கும் அருளாளன்.

ஒருநாள் பாரி தேரில் ஏறி ஊரின் வளங்காணச் சென்றான். செல்லும் வழியில் ஒரு முல்லைக் கொடியை நோக்கினான். முல்லைக் கொடியின் துன்ப நிலையை உணர்ந்து, உள்ளம் உருகினான். தேரில் நின்று இறங்கி, நேரில் சென்று முல்லைக் கொடியின் வாட்டத்தை நீக்க என்ன வழி என்று நினைத்தான். கொழுவிப் படர்ந்து தளைத்து மலரக் கொழுகொம்பில்லாமல் முல்லைக் கொடி குழைந்து கிடந்த நிலையை நினைக்க நினைக்க அவனின் உள்ளம் நீராய் உருகியது. உடனே ஒரு முடிவுக்கு வந்தான். தான் ஏறிவந்த தேரைக் கொண்டுவந்து முல்லைக் கொடியின் பக்கத்தில் நிறுத்தினான். ஆராத அன்புடன் அந்த முல்லைக் கொடியை அணைத்துத் தூக்கித் தேரில் படர விட்டான். முல்லைக் கொடி தேரின்மேல் படரும் காட்சியைக் கண்டான். பச்சைக் குழந்தை தன் தளிர்க்கையால் தாயின் முகத்தைத் தடவும் பொழுது தாயின் உள்ளம் தழைத்தல் போன்ற மகிழ்ச்சியுடன் வள்ளல் பாரி விளங்கினான். மகிழ்ந்த பாரி தான் மன்னன் என்பதையும் மறந்து, தேரில் வந்த வீதி வழியே காலால் நடந்து தன் அரண்மனையை அடைந்தான்.

*(நன்றி: தன்னேர் இலாத தமிழ் - வித்துவான் க வேந்தனார்)*

1. பாரி மன்னன் எப்படியான பண்பைக் கொண்டவன்? (3 புள்ளிகள்)

2. பாரி மன்னனின் புகழைப்பாடிய புலவர் யார்? (3 புள்ளிகள்)

3. மழையினால் என்ன நன்மை கிடைக்கின்றது என்று மேற்கண்ட உரைப்பகுதியில் குறிப்பிடப்படுகின்றது? (3 புள்ளிகள்)

4. பாரி தேரில் ஏறி ஊர்வளம் காணச் சென்ற போது ஏன் கவலையடைந்தான்? (3 புள்ளிகள்)

5. பாரி வள்ளல் முல்லைக்கு தேர் கொடுத்தது அறிவுபூர்வமான செயலா? ஆராய்க. (8 புள்ளிகள்)

2. **பின்வரும் வாக்கியங்கள் கருத்துத் தொடர்புடையனவாக அமையுமாறு வரிசைப்படுத்தி இலக்கமிடுக.** (10 புள்ளிகள்)

| | |
|---|---|
| | அதை அருகில் வைத்துப் பார்த்தால் கண்கள் கூசும். |
| | மருத்துவர்கள் ரேடியத்தைச் சிகிச்சைக்குப் பயன்படுத்த முடியுமா என்று ஆய்வு செய்தனர். |
| | அது மிகுந்த ஒளியையுடைய பளபளப்பான பொருள். |
| | இறுதியில் புற்றுநோய் சிகிச்சைக்கு இதனைப் பயன்படுத்தலாம் என்று அவர்கள் அறிந்தனர். |
| | ரேடியம் என்பது ஒருவகை அரிய உலோகப்பொருள். |

2. **பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஐந்து சொற்களுக்குக் குறையாத வசனங்கள் எழுதுக.** (15 புள்ளிகள்)

i. சிரிப்பு ______________________________

______________________________

ii. நடித்தனர் ______________________________

______________________________

iii. முரண்பாடு ______________________________

______________________________

iv. ஒற்றுமை ______________________________

______________________________

v. நகைச்சுவை ______________________________

______________________________

vi. விரும்பினேன் ______________________________

______________________________

vii. சங்கீதம் ______________________________

______________________________

viii. வெற்றி ______________________________

______________________________

ix. முத்தமிழ் ______________________________

______________________________

x. அழுகை ______________________________

______________________________

xi. திருமணம் ______________________________

______________________________

xii. உண்மை ______________________________

______________________________

xiii. கலைவிழா ______________________________

______________________________

xiv. வெறுத்தனர் ______________________________

______________________________

xv. யுத்தம் ______________________________

______________________________

3. **கன்பராவில் வசிக்கும் உமது நண்பர் உயர்தர வகுப்புக்கு தமிழை ஒரு பாடமாக எடுப்பதா இல்லையா என்று குழம்பிய நிலையில் உள்ளார். அவருக்கு தமிழை எடுப்பதில் உள்ள நன்மைகளை விபரித்து 60 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் ஒன்று எழுதுக.** (20 புள்ளிகள்)

4. **அவுஸ்திரேலியாவில் உள்ள தமிழ் வானொலி ஒன்றிற்கு அறிவிப்பாளர் பதவிக்கு தகுதி வாய்ந்தவர்கள் விண்ணப்பம் செய்யலாம் என்று அந்த வானொலி விளம்பரம் செய்துள்ளது. நீங்கள் அப்பதவிக்கு விண்ணப்பம் செய்வதற்கான காரணங்களையும், உங்கள் தகமைகளையும், சொந்த விபரங்களையும் குறிப்பிட்டு 60 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.** (15 புள்ளிகள்)

5. **பாடசாலைக்கு வீதியோரமாக நடந்து கொண்டிருக்கும் போது ஒரு திருடன் ஒரு வயோதிபரின் பணப்பையை பறித்துக் கொண்டு அவரை நிலத்தில் விழுத்தி விட்டு சென்றுவிட்டான். அந்த சம்பவ இடத்தில் நீர் இருந்தால் என்ன செய்திருப்பீர் எனக் கற்பனை செய்து எழுதுக. (120 சொற்கள்)** (20 புள்ளிகள்)

**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2010

வகுப்பு: **ஒன்பது** திகதி:- **04-12-2010** நேரம்: $2\frac{1}{2}$ **மணி**

ஆசிரியர்: **திரு ச தேவராசா**

**மாணவர் பெயர்:-**

1. **பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக:**

(4x5=20 புள்ளிகள்)

இயற்கையின் அழகை ரசிக்கின்ற போது மனதிற்கு இன்பமும், நிம்மதியும், ஆறுதலும் ஏற்படுகின்றது. இயற்கை அன்னையின் இனிய காட்சிகள் கவிஞர்களுக்கு பூரிப்பை ஏற்படுத்தி அவர்கள் சிறந்த கவிதைகளை எழுதுவதற்குக் களம் அமைத்துக் கொடுத்துள்ளன.

அதிகாலை வேளையில் உதய சூரியன் தனது செம்பொற் கதிர்களை விரித்துக்கொண்டு கிழக்குத் திசையில் தோன்றுவதைப் பாருங்கள். ஆதே சூரியன் தனது உலாவை முடித்துக்கொண்டு மாலை வேளையில் மேற்குத் திசையில் மறைவதைப் பாருங்கள். பௌர்ணமி தினத்தில் முழுநிலவு வானத்தில் பவனி வருவதைப் பாருங்கள். மேகக் கூட்டங்கள் நகர்ந்து வந்து முழு நிலவை மறைப்பதையும் மேகங்கள் விலகும்போது முழுநிலவு முன்பை விட மேலும் ஒளி வீசுவதையும் அவதானியுங்கள். வானவெளியில் அந்த முழுநிலவைச் சூழ்ந்து ஒளி வீசுகின்ற ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களைப் பாருங்கள்.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் அதிலும் நகரங்களைவிட கிராமங்களில் இயற்கைக் காட்சிகளை ரசிக்கின்ற வாய்ப்புகள் அதிகம். இயந்திர வேகத்தில் மனிதர்கள் இயங்குகின்ற அவுஸ்திரேலியா போன்ற மேலை நாடுகளில் இயற்கையின் எழிலை மக்கள் ரசிப்பது குறைவு என்று கூறலாம். ஆனால் எங்கே வாழ்ந்தாலும் மனிதன் இயற்கையின் அழகில் மூழ்கி ஆனந்தம் அடையவேண்டும். அதன் மூலம் அவன் உள ஆரோக்கியத்தையும், உடல் ஆரோக்கியத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மன அழுத்தம் என்பது அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற மக்களுக்கு ஒரு பெரிய பிரச்சனையாக உள்ளது. சிறிய விடயங்களுக்கெல்லாம் பெரிதாகக் கவலைப்பட்டு மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர். எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று அறிஞர் அண்ணாதுரை கூறினார். துன்பத்தைக் கண்டு துவண்டு விடாமல் துன்பத்தைத் தாங்கி வாழ்க்கையில் முன்னேறும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். தோல்விகளைக் கண்டு தளர்ந்து விடாமல் வெற்றியை அடையும் படிக்கட்டுகளாக அவற்றைக் கருதி விடாமுயற்சி செய்து வெற்றி காணவேண்டும்.

ஆசிரியர்கள் பிழையான விடைக்கு பிழைபோட்டாலே மனஅழுத்தத்திற்கு உள்ளாகின்ற மாணவர்களை இங்கு காண்கின்றோம். ஆசிரியர் பிழைக்கு சரி போட முடியுமா? பிழைபோட்டால் அதற்காகக் கவலைப்பட்டு மனதைக் கைவிடாமல் அடுத்த தடவை எல்லா வினாக்களுக்கும் சரியான விடை எழுத மாணவர்கள் முயற்சி எடுக்க வேண்டும்.

இயற்கையிலிருந்தே மாணவர்களும் மக்களும் பலவிடயங்களைக் கற்றுக்கொள்ளலாம். குளிர்காலத்தில் வெட்டி விடப்பட்ட பூமரங்கள் வெய்யில் காலத்தில் குருத்து விட்டு தழைத்து வளர்ந்து, பூத்துக் குலுங்கி, நறுமணம் வீசுவதைப் பார்த்தபின்பும் நாம் தளர்ந்துவிடலாமா? எனவே இயற்கையை ரசிப்போம். இன்பம் அடைவோம். இயற்கையிலிருந்து பாடங்களைக் கற்று வேதனைகளை சாதனைகளாக மாற்றி வெற்றியடைவோம்.

1. இயற்கை அழகை ரசிப்பதனால் மனிதனுக்கு ஏற்படும் நன்மைகள் எவை?

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

2. அதிகாலை, மாலை, இரவு வேளைகளில் ரசிக்கக்கூடிய இயற்கைக் காட்சிகளை வரிசைப்படுத்துக?

3. மன அழுத்தம் என்பது அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற மக்களுக்கு ஒரு பெரிய பிரசிசனையாக உள்ளது. இக்கூற்றை சுருக்கமாக ஆராய்க.

4. ''எதையும் தாங்கும் இதயம் வேண்டும்'' என்ற அறிஞர் அண்ணாதுரையின் பொன்மொழியை நீங்கள் எவ்வாறு கடைப்பிடிப்பீர்கள்?

5. வேதனைகளைச் சாதனைகளாக மாற்ற நாங்கள் முன்மாதிரியாகக் கொள்ளக்கூடிய இயற்கைக் காட்சியை எழுதுக.

2. பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஆறு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் எழுதுக. (20 புள்ளிகள்)

- வணக்கம்

______________________________________________

______________________________________________

- குறிக்கோள்

______________________________________________

______________________________________________

- விளையாட்டு

______________________________________________

______________________________________________

- விருப்பம்

______________________________________________

______________________________________________

- கலைவிழா

______________________________________________

______________________________________________

- நடித்தனர்

______________________________________________

______________________________________________

- விண்வெளி

______________________________________________

______________________________________________

- மலர்கள்

______________________________________________

______________________________________________

- பெற்றோர்

______________________________________________

______________________________________________

- பண்டிகைகள்

______________________________________________

______________________________________________

3. **கீழே எழுதப்பட்டுள்ள நிகழ்வை மேலும் 70 சொற்களுக்குக் குறையாமல் எழுதி நிறைவு செய்க. (20 புள்ளிகள்)**

அன்று வியாழக்கிழமை. அப்பாவும் அம்மாவும் வேலை முடிந்து வந்தபின்பு நத்தார், புதுவருடப்பிறப்புக்கு புத்தாடைகள் வாங்குவதற்காக நானும் தங்கையும் பெற்றோரும் பரமற்றாவில் உள்ள வெஸ்ற்பீல்ட் கடைத்தொகுதிக்குச் சென்றோம். பல கடைகளுக்கும் ஏறி இறங்கி எல்லோருக்கும் உடைகளை வாங்கினோம். பலகடைகளுக்கும் சென்று களைத்துப்போனமையால் மக்டொனால்சில் இரவு உணவைச் சாப்பிட்டோம். திரும்பி வரும்போது நியூஸ் ஏஜென்ற்றில் ஒரு டொலருக்கு சுரண்டல் அதிஷ்டசீட்டு ஒன்றை வாங்கிச் சுரண்டிப் பார்த்தேன். என் கண்களை என்னால் நம்பமுடியவில்லை. எனக்கு 25,000 டொலர் பரிசு விழுந்திருந்தது.

4. இலங்கை அல்லது இந்தியாவிலுள்ள நிலைமைகளையும் அவுஸ்திரேலியாவிலுள்ள நிலைமைகளையும் ஒப்பிட்டு அவுஸ்திரேலியாவில் வந்து இருக்குமாறு உங்களின் பெற்றோரின் பெற்றோருக்கு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.

(20 புள்ளிகள்)

**5. பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)**

i. சூழல் மாசடைதல்
ii. தமிழ் மக்கள் கொண்டாடும் பண்டிகைகள்

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2010

வகுப்பு: **பத்து** திகதி:- **04-12-2010** நேரம்: **$2\frac{1}{2}$மணி**

ஆசிரியர்: **திருமதி பு புருஷோத்தமர்**

**மாணவர் பெயர்:-**

1. **பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுக** (15 புள்ளிகள்)

சிட்னியிலே சுற்றிப் பார்ப்பதற்கு சுவாரசியமான பல இடங்கள் உள்ளன. அவரவர் தத்தமது விருப்பத்திற்கும் அபிலாசைக்கும் ஏற்ப பொருத்தமான இடங்களைத் தெரிந்து கொள்ளலாம். பாறைக்குள்ளே நீர் சிதறும் அலை இடம் - கியாமா (Kiama) – ப்ளோ ஹோல் (Blowhole) முகத்துவாரம் - தி என்ட்ரன்ஸ் (The entrance) - போன்டாய் (Bondai) - மான்லி (Manly) என்று பல கணக்கற்ற கண்ணுக்கினிய நீலவானம் முத்தமிடும் கடற்கரைகள் பார்க்கலாம். நீலமலைகள் (Blue Mountains) -சுண்ணாம்புப் படிவக் குகைகள் (Caves) - உலகப் புகழ் பெற்ற ஆஸ்திரேலிய மதுவகைத் தோட்டங்கள் என்று இன்னும் பல காணலாம்.

ஆனால் இரண்டு மணிநேரம் பயணத்தில் குடும்பத்தோடு, ஆனந்தமயமான அமைதி, சூழ நம்மைப் படைத்த இயற்கையோடு ஒன்றிப் பெறச் சிறந்த இடம் மின்னமூரா மழைக்காடு (Minnamurra rainforest) அல்லது பசுமைச் சோலை என்று கூறலாம். இங்கே இயற்கையின் முழு ஆளுமை புலப்படுகிறது. எங்கும் அமைதி. அந்த அமைதியை குலைப்பது குயில், மைனாக்களின் குரலும், சில்வண்டுகளின் ரீங்காரமும் தான்.

உடலை மட்டுமன்றி உள்ளத்தையும் குளிர்விக்கும் இடம் இந்த மின்னமூரா பசுமைச்சோலை. எங்கும் பச்சைப் பசேல் என்ற மரங்கள், வானுயர்ந்த நெடிய தருக்கள், நாம் விடும் மூச்சே பேரோசையாய் ஒலிக்கும் அந்த அமைதி நம்மை ஆட்கொள்ளும். மன அழுத்தம் நிறைந்த இன்றைய வாழ்க்கைக்கு, நமக்கு, உள்ளமும் உடலும் புத்துணர்ச்சி பெற அருமையான இடம் இது என்பது மறுக்க முடியாத உண்மை.

மின்னமூரா பசுமைச் சோலை, சிட்னிக்குத் தெற்காக இரண்டு மணி நேர பிரயாணத்தில் கவின்மிகு ஜம்பறூ பள்ளத்தாக்கில், தென் கடலோரத்தில் கியாமா கடற்கரைக்கு மேற்கில் 15 கி. மீற்றர் உட்புறமாக அமைந்துள்ளது. கோடை காலம் போய்வருவதற்கு சிறந்தது. குளிர் காலத்திலும் செல்லலாம். இடத்திற்கேற்ற, குளிருக்கேற்ற ஆடைகள் முக்கியம். எல்லோரும் எந்த வயதினரும் இலகுவாகச் சுற்றி வர அருமையான செப்பனிடப்பட்ட மரப்பாதைகள் இருப்பதால் சோலைச் சுகத்தினை அனுபவிப்பதில் எந்தக் குறையுமில்லை.

இச்சோலை கிட்டத்தட்ட 70 வகையான பறவைகள், 20க்கும் மேற்பட்ட விலங்குகள், 11 வகையான பல்லி இனங்கள் வாழப் புகலிடமாக விளங்குகிறது. மலை விளிம்புக்குச் சென்றால் பசுமைப் பள்ளத்தாக்கினையும், மேலே மின்னமூரா நீர்வீழ்ச்சியின் அழகிய காட்சியினையும் ரசித்து வரலாம். பிற்பகல் 3 மணிக்குப் பின் எந்தப் பாதையிலும் செல்ல அனுமதி இல்லை. அதனால் காலைப்பயணமே உகந்தது.

1. சிட்னியிலே பார்க்கக் கூடிய அழகிய கடற்கரைகள் என்று பந்தியிலே குறிப்பிடப்பட்டவை எவை? (3 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

2. சிட்னியில் கண்டுகளிக்க மேலும் என்னென்ன இயற்கை அம்சங்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது? (3 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

3. மின்னமூரா மழைக்காடு பற்றிக் கூறப்பட்ட சிறப்புகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

4. இச்சோலையில் புகலிடம் பெற்றுள்ள உயிரினங்கள் எவை? (3 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

5. மின்னமூரா மழைக்காடு எங்கே அமைந்துள்ளது? (2 புள்ளிகள்)

______________________________________________

**2. உரைப்பகுதியை வாசித்தபின் வினாக்களுக்கு விடை எழுதுக. (15 புள்ளிகள்)**

பாடகி, நடிகை, தேசபக்தை என்று பன்முகங்களுக்குச் சொந்தக்காரர் ‘‘கே.பி.எஸ்’’ என்று அழைக்கப்பட்ட கொடுமுடி பாலாம்பாள் சுந்தராம்பாள். அந்தக் காலத்திலேயே பிறந்த ஊரையும் பெற்ற தாயையும் தன் பெயருக்கு முன் சேர்த்துக்கொண்ட புதுமைப்பெண், கானக்குயில் சுந்தராம்பாள் ஒருவரே.

‘‘கோயில் மணி ஒலிப்பது போன்ற கணீர் என்ற குரல், வார்த்தைகளை வைரமாகப் பிரகாசிக்க வைக்கிற உச்சரிப்புத் திறன்’’ இவை தான் சுந்தராம்பாளின் மாறாத அடையாளங்கள் ஆகும். ஔவையார், கவுந்தி அடிகள் ஆகிய சரித்திர கதாபாத்திரங்களை மக்கள் மனதில் ஆழப் பதிய வைத்த பெருமை இவரைச் சாரும்.

தேசியம், தெய்வீகம் இரண்டையும் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்தவர் கே.பி.எஸ். அன்றைய சுதந்திரப் போராட்டக் காலத்தில், இவருடைய நாடகங்களில் ஒலித்த தேசியக் கருத்துக்கள் பார்ப்போர் மனதில் விடுதலை உணர்ச்சியைத் தட்டி எழுப்பின. அதற்கான மரியாதையாக, தமிழக சட்ட மேலவை உறுப்பினர் பதவி இவருக்கு வழங்கப்பட்டது. இந்தப் பதவியை வகித்த முதல் திரையுலகப் பிரமுகர் இவரே.

1. கே.பி. எஸ் என்று குறிப்பிடப்படுபவர் யார்? (2 புள்ளிகள்)

______________________________

2. எதற்காக அவரைப் புதுமைப் பெண் என்கிறார்கள்? (2 புள்ளிகள்)

______________________________

______________________________

3. அவர் காட்டிய பன்முகங்கள் எவை? (3 புள்ளிகள்)

______________________________

4. மக்கள் மனதில் இவர் பதியவைத்த சரித்திர கதாபாத்திரங்கள் எவை? (2 புள்ளிகள்)

______________________________

5. இவருடைய இரு கண்களாக விளங்கியவை எவை? (2 புள்ளிகள்)

______________________________

6. இவர் வகித்த அரசியல் பதவி என்ன? இதில் உள்ள சிறப்பு என்ன? (4 புள்ளிகள்)

______________________________

______________________________

3. மாலதி நடனக்கலையை கடந்த எட்டு வருடங்களாகக் கற்று வருகிறாள். அவள் 10ம் ஆண்டு படித்துக்கொண்டிருக்கும் மாணவி. அவளது பெற்றோர் சற்குணானந்தன் தம்பதிகள் தமது மகளுக்கு அரங்கேற்றம் செய்து பார்க்க ஆசைப்பட்டனர். ஆசிரியை ரேவதி பரதன் அவர்களும் அதற்கான விசேட பயிற்சி அளித்துக்கொண்டிருக்கிறார். எதிர்வரும் 2011ம் ஆண்டு மார்ச் 28ந் திகதி பாங்ஸ்ரவுன் நகர மண்டபத்தில் பிற்பகல் 6.30 மணிக்கு நிகழ்ச்சியை அமைக்கத் தீர்மானித்துள்ளனர். இந்தத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு அழைப்பிதழ் எழுதுக. (15 புள்ளிகள்)

4. நீர் உமது உயர்தரப் பரீட்சைக்குப் பாடங்கள் தெரிவு செய்ய வேண்டியுள்ளது. 11ம் ஆண்டிலிருந்து நீர் கற்பதற்குப் பொருத்தமானதும், உமக்கு விருப்பமானதும், இலகுவானதுமான பாடங்கள் பற்றியும் அவற்றின் முக்கியத்துவம் பற்றியும் அறிந்து கொள்ள அயல்மாநிலத்தில் வசிக்கும் உமது ஒன்றுவிட்ட சகோதரிக்கு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக. (10 புள்ளிகள்)

5. **பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து 150 – 175 சொற்களுக்கு அமைவாகக் கட்டுரை எழுதுக.** **(15 புள்ளிகள்)**

i. ஆண்களும் பெண்களும் படிக்கும் கலவன் பாடசாலையின் நன்மை தீமைகள் பற்றிய மதிப்பீட்டுக் கட்டுரை ஒன்று எழுதுக.

ii. “அவுஸ்திரேலிய பல்கலாசார சமூகம்” என்ற தலைப்பில் உமது பாடசாலை விழாவில் நீர் ஆற்ற இருக்கும் பேச்சினை எழுதுக.